கோயம்புத்தூர், நஞ்சப்பா நகரில் உள்ள வி.கே.வி. நகரில் சாலை அமைத்ததற்கு நேற்று முன்தினம் (24.9.2023) அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்ததோடு, கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை வழங்கியதற்கும் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி.கல்பனா ஆனந்தகுமார், மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மு.பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், 23.09.2023 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு 77க்குட்பட்ட கே.பி. பார்க் குடியிருப்புப் பகுதியில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட உடற்பயிற்சிக் கூடத்தினை மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ரூ.409 .74 கோடி மதிப்பீட்டில் 2364 அடுக்குமாடி குடியிருப்புகள்!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, செப். 26 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 23.9.2023 அன்று தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கொய்யாதோப்பு திட்டப்பகுதியில் ரூ.61.20 கோடி மதிப்பீட்டில் 324 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும், சேத்துப்பட்டு மீனாம்பாள் சிவராஜ் திட்டப் பகுதியில் ரூ.41.30 கோடி மதிப்பீட்டில் 240 புதிய குடியிருப்புகளுக்கும் கோட்டூர்புரம் திட்டப்பகுதியில் ரூ.307.24 கோடி மதிப்பீட்டில் 1800 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும், ஆக மொத்தம் 3 திட்டப்பகுதிகளில் ரூ.409 .74 கோடி மதிப்பீட்டில் 2364 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இதில் அவர் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொய்யாதோப்பு திட்டப்பகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் 1973 ஆம் ஆண்டு 326 சதுர அடியில் தரை மற்றும் 4 தளங்களுடன் கட்டப்பட்ட 302 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது. அப்பழைய குடியிருப்புகளை அகற்றி 61 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 437 சதுர அடியில் தரை மற்றும் 5 தளங்களுடன் 324 புதிய குடியிருப்புகளுக்கும், எழும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சேத்துப்பட்டு மீனாம்பாள் சிவராஜ் நகர் திட்டப்பகுதியில் 1973 ஆம் ஆண்டு 326 சதுர அடியில் தரை மற்றும் 3 தளங்களுடன் கட்டப்பட்ட 224 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது.

அப்பழைய குடியிருப்புகளை அகற்றி 41 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 400 சதுர அடியில் தூண் மற்றும் 6 தளங்களுடன் 240 புதிய குடியிருப்புகளுக்கும், சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோட்டூர்புரம் திட்டப்பகுதியில் 1974ஆம் ஆண்டு 213 சதுர அடியில் தரை மற்றும் 2 தளங்களுடன் கட்டப்பட்ட 1476 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது. அப்பழைய குடியிருப்புகளை அகற்றி 307 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 396 சதுர அடியில் தூண் மற்றும் 2 தளங்களுடன் 1800 புதிய குடியிருப்புகளுக்கும், அடிக்கல் நாட்டப்பட்டது.

409.74 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதியதாக 2364 குடியிருப்புகள் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி மொத்தம் 3 திட்டப்பகுதிகளில் ரூ.409.74 கோடி மதிப்பீட்டில் 2364 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

மேலும் இதில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் பேசியதாவது:-

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட இடியும் தருவாயில் உள்ள பழைய குடியிருப்பு களை கணக்கெடுக்கும் படி உத்தரவிட்டார்கள். அதன்படி சென்னையில் 27,138 வீடுகளும் மற்றும் பிற மாவட்டங்களில் 3,354 வீடுகளும் மொத்தம் 30,492 பழைய வீடுகளை இடித்து விட்டு புதிய வீடுகள் கட்ட முடிவு செய்யப்பட்டது. 2021-2022 மற்றும் 2022-2023 நிதியாண்டுகளில் ரூ.2,400 கோடி மதிப்பீட்டில் 15000 புதிய வீடுகள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி 30 திட்டப்பகுதிகளில் 7582 வீடுகள் இடிக்கப்பட்டு ரூ.1627.97 கோடி மதிப்பீட்டில் 9,522 வீடுகள் கட்டும்பணிதுவக்கப்பட்டுள்ளது. இதில் 5 திட்டப்பகுதிகளில் ரூ.196.27 கோடி மதிப்பீட்டில் 1147 புதிய குடியிருப்புகள் கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் 3 திட்டப்பகுதிகளில் ரூ.409.74 கோடி மதிப்பீட்டில் 2364 புதிய குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. மொத்தம் 8 திட்டப்பகுதிகளில் ரூ. 606.01 கோடி மதிப்பீட்டில் 3511 வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 22 திட்டப்பகுதிகளில் 1021.87 கோடி மதிப்பீட்டில் 6011 குடியிருப்புகளுக்கு விரைவில் அடிக்கல் நாட்டப்பட உள்ளது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேசினார்.

இப்புதிய குடியிருப்புகள் ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்படவுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது. 18 மாதத்தில் பணிகள் நிறைவு செய்து குடியிருப்பு தாரர்களுக்கு வழங்கப்படும். இங்கு கட்டப்படும் குடியிருப்புகள் ஏற்கனவே இருந்த குடியிருப்பு தாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். மீதமுள்ள குடியிருப்புகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு வழங்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய கே.பி பார்க் திட்டப்பகுதியில் ரூ.1.31 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட கால்பந்து விளையாட்டு மைதானத்தையும் , எழும்பூர் சட்டமன்ற மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டப்பட்ட உடற்பயிற்சி கூடத்தையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். மேலும், சேத்துபட்டு மேயர் சத்திய மூர்த்தி சாலையில் அமைந்துள்ள நடுநிலைப் பள்ளியில் 39 ஸ்மார்ட் வகுப்பறையை அமைச்சர் திறந்து வைத்தார்

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி.ஆர்.பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர்கள் கூ.பிஜெயின், எஸ்.மதன்மோகன், ஆர். துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள் சிவராஜசேகரன் இரா.ஜெகதீசன், கே.ஆர் கதிர் முருகன் உள்ளாட்சி பிரதிநிதிகள், வாரிய தலைமை பொறியாளர் வே.சண்முக சுந்தரம், நிர்வாக பொறியாளர்கள் ச.சுடலைமுத்து குமார், சு.ஹரிகரன், வாரிய பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வுப் பயணத் திட்டத்தின் கீழ் 69'வது தொகுதியாக சட்டமன்ற உறுப்பினர் கதிரவனின் மண்ணச்சநல்லூர் தொகுதியில் ஆய்வு மேற்கொண்டார். மண்ணச்சநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் விரிவான ஆய்வு மேற்கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடி ஆசிரியர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 23.09.2023 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சி, கே.பி.பார்க் திட்டப் பகுதியில் கால்பந்து விளையாட்டு மைதானம் மற்றும் உடற்பயிற்சிக் கூடத்தை திறந்து வைத்து, கால்பந்து விளையாட்டு வீரர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மகேஷ் குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ பெருநகர சென்னைமாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், 23.09.2023 அன்று திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு77க்குட்பட்ட கே.பி. பார்க் குடியிருப்புப் பகுதியில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.1.31 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கால்பந்து விளையாட்டு மைதானத்தினை மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார் , கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், 23.09.2023 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு108, சிவராஜபுரம், சேத்துப்பட்டு சத்தியமூர்த்தி சாலையில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள 2 உயர்தர அறிவுத்திறன் வகுப்பறைகளை (Smart Classroom) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் கூ.பி.ஜெயின் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் - வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம் - கொள்ளுமேடு ஆரம்ப சுகாதார நிலையத்தில்

ஒருங்கிணைந்த காசநோய் பரிசோதனை - சிகிச்சை மையம்!

அமைச்சர்கள் ஆர்.காந்தி - மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தனர்!

சென்னை, செப்.26-

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்து துறை சார்பாக திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், கொள்ளுமேடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் நேற்று முன்தினம் (24.09.2023) மாநில அளவில் "காசநோய் இல்லா தமிழ்நாடு" எனும் இலக்கினை அடைய வட்டார அளவிலான ஒருங்கிணைந்த காசநோய் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையத்தை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் திறந்து வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் முன்னிலையில் பார்வையிட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, காசநோய் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் தொடக்க விழாவில் 30 பயனாளிகளுக்கு தலா ரூ1,600 வீதம் மொத்தம் ரூ48,000 மதிப்பீட்டிலான காசநோய் மருந்து பெட்டகங்களையும் 30 கர்ப்பிணிப் பெண்களுக்கு தலா ரூ2,000 வீதம் மொத்தம் ரூ60,000 மதிப்பீட்டிலான ஊட்டச்சத்து பெட்டகங்களையும் அமைச்சர்கள் வழங்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது :-

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, மாநில அளவில் காசநோய் இல்லா தமிழ்நாடு என்ற இலக்கினை அடைய திருவள்ளூர் மாவட்டம் கொள்ளுமேடு இன்று பகுதியில் உள்ள மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இன்றைக்கு வட்டார அளவிலான ஒருங்கிணைந்த காச நோய் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் என்ற புதிய திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. முதன்முறையாக வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் காசநோய் கண்டறிவதற்குரிய பரிசோதனைகள், சிகிச்சைக்கான மருந்துகள் முதலுதவிகள் உள்ளடக்கிய அனைத்து மருத்துவ சேவைகளும் ஒரே இடத்தில் ஒருங்கிணைந்து கிடைக்கிற வகையில் "Walk in centre for TB" உருவாக்கப்படும் என்று கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. Walk in centre One stop TB Solution என்கின்ற வகையில் ரூ20 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த வகையில் காச நோய்க்கான மூலக்கூறு அடிப்படையிலான பரிசோதனைகள் விகிதத்தை அதிகரிப்பதற்கும், அதேபோல் பரிசோதனைக்கான பொருள்கள் அனைத்தும் மருத்துவமனைகளுக்கும் குறிப்பாக வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்த சோதனைக்கான வசதிகளை ஏற்படுத்தி தருவதற்கான திட்டம் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.எனவே, Walk in centre for TB உருவாக்கப்படும் என்ற அந்த அறிவிப்பு இன்று செயலாக்கம் பெறுகிறது. இந்த திட்டம் நேற்று முன்தினம் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இந்த திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஏற்கனவே காசநோய் இல்லா தமிழகம் என்ற வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தற்பொழுது 48 டிஜிட்டல் எக்ஸ்ரே வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளது. மலை கிராமங்கள் குக்கிராமங்கள் என்று எல்லா இடங்களுக்கும் இந்த வாகனங்கள் சென்று, பொது மக்களை பரிசோதனை செய்யும் விதமாக டிஜிட்டல் எக்ஸ்ரே எடுத்து அங்கிருந்து மருத்துவமனைகளுக்கும் பரிமாற்றம் செய்து யாருக்கு காச நோய் உள்ளது என்பதை உடனடியாக தெரிந்து கொள்வதற்காக இந்த வாகனங்கள் தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. இதில் 23 வாகனங்களை 2023ஆம் ஆண்டு ஜூலை1ம் தேதியன்று முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

மேலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தற்போது TB Active cases என்ற வகையில் 86,000 பேர் உள்ளனர். இவர்களுக்கு மாதந்தோறும் ரூ500 வழங்கும் திட்டமும் தற்பொழுது செயல்பாட்டில் உள்ளது. அந்த வகையில் இதுவரை ரூ16 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த 86,000 நபர்களில் பெரும் பகுதியானவர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ1,600 மதிப்பீட்டிலான புரதச்சத்துடன் கூடிய உணவு பெட்டகம் தன்னார்வலர்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், 110 தன்னார்வலர்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் மூலமாக இந்த பெட்டகங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூலை 1ம் நாள் 100 தன்னார்வலர்களுக்கு விருதுகள் தந்து அவர்களின் அளப்பரிய சாதனைகளை பாராட்டினார்கள். இன்று காச நோய் சிகிச்சை மையம் துவக்கி வைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இந்தத் தொகுதியில் உள்ள காசநோயாளிகளுக்காக மாதந்தோறும் வழங்கும் உணவு பெட்டகங்களுக்கு இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான சுதர்சனம் பொறுப்பு ஏற்றுக் கொள்வதாகவும் இந்த மாவட்டம் முழுவதும் உள்ள 3000க்கும் மேற்பட்ட காச நோயாளிகளுக்கு வழங்குவதற்கு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்பதாகவும் அறிவித்துள்ளார்கள். இது மற்ற மாவட்டங்களுக்கு எல்லாம் ஒரு முன்னுதாரணமான செய்தியாக உள்ளது. அந்த வகையில், இன்றைக்கு இந்த நிகழ்ச்சி தொடங்கப்பட்டுள்ளதால் இந்த மாவட்ட முழுவதும் உள்ள காசு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிகப்பெரிய அளவிலான தீர்வு கிடைத்துள்ளது.

ஏற்கனவே, முதலமைச்சர் அவர்கள் திருச்சி, சன்னாசிப்பட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் காச நோய்க்காக இன்றைக்கு பல்வேறு வகைகளில் காச நோயை கண்டறிவதற்கு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 46 அதிநவீன கருவிகளை அன்று மருத்துவர்களுக்கு வழங்கி அன்று முதல் திருச்சியில் அவை பயன்பாட்டிற்கு வந்துள்ளதுஇப்படி காச நோய் பிரிவில், காசநோய் இல்லா தமிழ்நாடு என்று இலக்கை அடைவதற்கு பல்வேறு முயற்சிகள் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டு வருகிறது. அந்த டிஜிட்டல் எக்ஸ்ரே வாகனங்கள் தமிழ்நாடு முழுவதும் சென்று ஆண்டுக்கு 17,000 எக்ஸ்ரே படங்களை எடுத்து பாதிப்புக்குள்ளானவர்களை கண்டறிந்து, அவர்களுக்கு சிகிச்சை அளிக்க உதவியாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த புதிய முயற்சியை வட்டார அளவிலான ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் காச நோய்க்கான மருத்துவம் மருத்துவ சேவை, பரிசோதனைகள் போன்ற ஒருங்கிணைந்த சேவைகளை இங்கு தொடங்கி வைத்துள்ளோம் என்பதில் இந்த மருத்துவத்துறை பெருமை கொள்கிறது.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.